# 02-05-2024 செய்தி

## நூற்றாண்டில் குடிஅரசு

- தமிழ்நாட்டில் சமூக மாற்றத்துக்கான இயக்கத்தைத் தொடங்கி நடத்திய பெரியார், தன்னுடைய கருத்துகளை எழுத்தின் வாயிலாகக் கொண்டு சேர்க்க முதன்முதலாகத் தொடங்கிய இதழ் 'குடிஅரசு'.
- பகுத்தறிவு, பெண் விடுதலை, சாதி ஒழிப்பு ஆகிய தளங்களில் 'குடிஅரசு'-வின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.
- 02.05.1925இல் ஈ.வெ.ராமசாமி, வா.மு.தங்கபெருமாள் இருவரையும் ஆசிரியராகக் கொண்டு 'குடிஅரசு' இதழ் தொடங்கப்பட்டது.
- சில மாதங்களில் ஆசிரியர் பொறுப்பிலிருந்து தங்கபெருமாள் விலகிய பின்னர், பெரியார் ஆசிரியராகத் தொடர்ந்தார்.
- எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், சாதிகள் இல்லையடி பாப்பா என்ற மகாகவி பாரதியாரின் பாடல்களை முகப்பில் கொண்டு 'குடிஅரசு'-வின் முதல் இதழ் வெளியானது.
- ஈ.வெ.ராமசாமி என்ற பெயரிலும், சித்திரபுத்திரன் என்ற புனைப்பெயரிலும் தனது கட்டுரைகள், தலையங்கங்கள் வாயிலாக ஒடுக்கப்பட்டோருக்கான உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார்.
- தனித்தமிழ் இயக்கத்துடன் இணைந்து தமிழ் வளர்ச்சிக்கான பணியைச் செய்ததும், தமிழ் மொழியுரிமைக்கான போராட்டக் களத்தில் தொடர்ந்து முன்னின்றதும் 'குடிஅரசு'-வின் முக்கியமான பங்களிப்புகள்.
- 'குடிஅரசு'என்ற தூய தமிழ்ப் பெயரில் இதழைத் தொடங்கியது தனித்தமிழின் பயன்பாடு குறித்த பெரியாரின் முன்னெடுப்புக்குச் சான்று, திருக்குறள் போன்ற இலக்கியங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயல்பட்ட அதே வேளையில், பகுத்தறிவுக்குப் புறம்பான இலக்கியங்களை விமர்சிக்கவும் 'குடிஅரசு' தயங்கியதில்லை.
- 1938 இல் தமிழ்நாட்டில் இந்தி கட்டாயப்படுத்தப்பட்டபோது, அதன் பாதிப்பை உணர்த்தித் தொடர்ந்து பரப்புரையில் ஈடுபட்டதுடன், இந்தித் திணிப்பைத் தமிழர்கள் எதிர்த்துப் போராடிய வரலாறு அனைத்தையும் இந்த இதழ் ஆவணப்படுத்தியுள்ளது.
- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தும், விதவை மறுமணத்தை ஆதரித்தும் வெளிவந்த கட்டுரைகள் எண்ணற்றவை.
- அன்றைய பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலைப்பில் தலையங்கம் (29.10.1933) எழுதியதற்காகப் பெரியார் மட்டுமன்றி, பெரியாரின் சகோதரியும் இதழின் வெளியீட்டாளருமான கண்ணம்மாளும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.
- தமிழர்களின் சமூக, பண்பாட்டு அரசியலில் தவிர்க்க இயலாத பாத்திரத்தை வகித்த 'குடிஅரசு' 05.11.1949 வரை வெளிவந்தது.

## சூப்பர்சோனிக் டார்பிடோ ஏவுகணை சோதனை வெற்றி

- கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்திறனை மேம்படுத்துவதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) டார்பிடோ சூப்பர்சோனிக் ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒடிசா மாநிலம், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் தீவில் இருந்து சூப்பர்சோனிக் டார்பிடோ ஏவுகணை நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

## தாய்லாந்தில் தமிழர்கள் நினைவைப் போற்றும் நடுகல் திறப்பு

**நடுகல் ஏன்?**

- 1939-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரை இரண்டாம் உலகப் போர் நடைபெற்றது.
- அப்போது, தாய்லாந்தை பர்மாவுடன் (மியான்மர்) இணைக்கும் ரயில் பாதை கட்டுமானப் பணிகளில் 1.50 லட்சம் தமிழர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- இந்தப் பணியின்போது, வேலைச்சுமை, உணவு கிடைக்காதது, நோய் முதலிய பாதிப்புகளால் 70 ஆயிரம் தமிழர்கள் இறந்தனர்.
- உயிரிழந்த தமிழர்களின் உடல்கள் தாய்லாந்தின் காஞ்சனபுரியில் உள்ள தாவாவோர்ன் என்ற புத்தர் கோயில் வளாகத்தில் மொத்தமாக புதைக்கப்பட்டன.
- இந்த இடம் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த இடத்தில் புதைக்கப்பட்டவர்கள், தமிழர்கள் என்பது அங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் டிஎன்ஏ ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- எந்தவித அங்கீகாரமும் இல்லாமல் புதைக்கப்பட்ட தமிழர்களுக்கு மரியாதை செய்யும் வகையில், தமிழ்ச் சமுதாய மரபுப்படி 'நடுகல்' அமைக்க தாய்லாந்து நாட்டு தமிழ்ச் சங்கம் முடிவெடுத்தது.

## கடற்படை துணைத் தளபதியாக சுவாமிநாதன் பதவியேற்பு

- அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி நேற்று முன்தினம் கடற்படை தளபதியாக பொறுப்பேற்றதையடுத்து, அவர் வகித்த துணை தளபதி பொறுப்புக்கு வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டார். அவர் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.
- அதன்பின் அவர் போர் நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்தினார். இதற்கு முன் அவர் கடற்படை தலைமையகத்தில் பணியாளர் பிரிவுக்கு தலைமை தாங்கினார்.
- ஐஎன்எஸ் வித்யுத், வினாஷ், குலிஷ், மைசூர், விக்ரமாதித்யா விமானம் தாங்கி போர்க்கப்பல் ஆகியவற்றின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றினார்.
- 1987-ம் ஆண்டு கடற்படையில் சேர்ந்த சுவாமிநாதன், தகவல் தொடர்பு மற்றும் எலக்ட்ரானிக் போர் முறையில் நிபுணத்துவம் பெற்றவர்.
- தேசிய பாதுகாப்பு அகாடமி, அமெரிக்காவின் கடற்படை போர் கல்லூரி உட்பட பல பிரிவுகளில் சிறப்பு பயிற்சி பெற்றுள்ளார்.
- கடற்படையில் இவர் ஆற்றிய சேவைக்காக அதிவிஷிஸ்ட் சேவா பதக்கம், விசிஷ்ட் சேவா பதக்கம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.